09/10/86.

DR. K. ARUMUGAM

# விசேட அறிவித்தல்

தோழர் - (டாக்டர்) - ஆறுமுகம்.

---

ஈழப்பிரச்சார ஒன்றியத்தின் தலைவர் (E.S.C) தோழர் (டாக்டர்) ஆறுமுகம் அவர்கள் இன்று (09/10/86) திடீரென காலமானார், என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக்கொள்கிறோம். ஈழப்புரட்சியமைப்பின் லண்டன் கிளையின் முக்கிய உறுப்பினரும் SCOT இன் முன்னாள் தலைவருமான தோழர் ஆறுமுகம் அவர்கள் பெரிய பிரித்தானியாவில் உள்ள தமிழ்ச் சமுதாயத்தின் மிக முக்கியமான உறுப்பினராவார். ஈழத்தேசிய விடுதலைப்போராட்டத்துடன் தன்னை இறுக்கமாக இணைத்துக்கொண்ட இவர் அனைத்து விடுதலை இயக்கங்களுடன்- குறிப்பாக முற்போக்கு சக்திகளுடன் நெருக்கமான தொடர்பை தான் இறக்கும்வரை வைத்திருந்தார். நேற்றைய தினம் 8/10/86 இல் (U.N.O) ஐ.நா.சபையின் லண்டன் கிளையின் முன்னால் நடைபெற்ற 24 மணி நேர உண்ணாவிரதப்போராட்டத்தில் இரவு ஒரு மணி வரை கலந்துகொண்டபின் வீடு திரும்பினார். காலையில் அவரின் திடீர் மரணம் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவரின் அகால மரணத்தினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், அவருடன் பொதுவாழ்வில் சேர்ந்துகொண்ட அன்பர்கள், ஆதரவாளர்கள், தோழர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

FUNERAL ARRANGEMENTS OF DR.K.ARUMUGAM

DATE : SATURDAY 18th OCTOBER 1986.

PLACE : 13, ALTYRE WAY, BECKENHAM, KENT.

8.30 A.M. : PUBLIC TO PAY THEIR LAST RESPECTS

10.00 A.M.: RELIGIOUS RITES.

11.00 A.M.: COFFIN TO LEAVE FOR CREMATION TO SOUTH LONDON CREMATORIUM ROWAN ROAD, STREATHAM VALE, LONDON SW16.

11.30 A.M.: TRIBUTE TO THE LATE COMRADE BY:

1. REP. OF EELAM SOLIDARITY CAMPAIGN.
2. REP. OF S.C.O.T.
3. REP. OF CITY UNIVERSITY
4. REP. OF EROS.

12.00 NOON : CREMATION.

Eelam Solidarity Campaign
BM Box 3009
London WC1N 3XX